74—

மகளிர் கலைக் கல்லூரி

***5039—திரு. சி. ராஜா:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, சங்கரியில் மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, சங்கரியில் மகளிர் கலைக் கல்லூரி துவங்குவது குறித்து கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா அவர்கள்.*

திரு. சி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சமூக நீதி காத்த வீராங்கனை அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மாவின் பொற்கால ஆட்சியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறப்பாக நடத்திவருகிறார். அனைத்து சமுதாயத்தினரும் மாநிலங்களவையில் பங்குபெறும் வகையிலே, அருந்ததியர் சமுதாயத்தைச் சேர்ந்த எங்கள் மேட்டூர் நகர கழகச் செயலாளர் திரு. சந்திரசேகர் அவர்களுக்கும், இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த திரு. முஹம்மது ஜான் அவர்களுக்கும் மாநிலங்களவைத் தேர்தலிலே போட்டியிட வாய்ப்பளித்து, 'சமூக நீதி காவலர்' என்று நிரூபித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். தற்போது எடப்பாடி அரசு கலைக் கல்லூரி சிறப்பாக நடைபெற்று வருகிறது. இருந்தாலும், மகளிருக்கென்று, ஒரு கலைக் கல்லூரியை அங்கே அமைத்தால்,*

2019 ஜூலை 10]

மாணவிகள் தனியாகக் கல்வி கற்க ஏதுவாக இருக்கும். இந்தக் கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, நிறைவேற்றித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய சேலம் மாவட்டத்தில், 4 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அதிலே ஒன்று மகளிர் கல்லூரியாக இயங்கிக்கொண்டிருக்கிறது. அரசு உதவி பெறும் கல்லூரிகள் 2 இருக்கின்றன. அந்த இரண்டிலே ஒன்று மகளிருக்கென்று தனியாக அரசு உதவி பெறும் கல்லூரியாக இயங்கிக்கொண்டிருக்கிறது. அதேபோன்று, பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி ஒன்றும் இருக்கிறது. மேலும் 33 சுயநிதிக் கல்லூரிகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அந்தவகையில் பார்க்கின்றபோது, நான்கு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ஒரு மகளிர் கல்லூரியில் ஒப்பளிக்கப்பட்ட இடங்களில் 44 இடங்கள் காலியாக இருக்கின்றன. அரசு உதவி பெறும் கல்லூரிகளில், மகளிருக்கென்று ஒதுக்கப்பட்ட ஒரு கல்லூரியிலே 155 இடங்கள் காலியாக இருக்கின்றன. அந்த மாவட்டத்தில் மகளிருக்காக இருக்கக்கூடிய இரண்டு கல்லூரிகளிலும் ஒப்பளிக்கப்பட்ட இடங்களில் 199 இடங்கள் காலியாக இருக்கின்றன. எனவே, அங்குள்ள மாணவிகள் கல்லூரிகளில் சேர்ந்து படிப்பதற்குண்டான வாய்ப்பு அந்த மாவட்டத்தில் ஏற்கெனவே உருவாக்கப்பட்டிருக்கிறது.*

அதோடு மட்டுமல்லாமல், எடப்பாடியிலுள்ள உறுப்புக் கல்லூரியிலே இடம் போதவில்லையென்று குறிப்பிட்டார். அவர் குறிப்பிட்டது உண்மைதான். அந்தக் கல்லூரியில் ஒப்பளிக்கப்பட்ட இடங்களில் 9 இடங்கள் மட்டும்தான் காலியாக இருக்கின்றன. ஆகவே, மகளிர்களும், மற்றவர்களும், மாணாக்கர்களாக இருக்கக்கூடிய அத்தனைபேரும் அந்த மாவட்டத்தில் உள்ள கல்லூரிகளில் சேர்ந்து, கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயில்வதற்கான வாய்ப்பு சரியான முறையில் இருக்கின்ற காரணத்தினால், இப்போது சங்கரி தொகுதியிலே பெண்களுக்கென்று தனியாக ஒரு மகளிர் கல்லூரி அமைக்கும்

தேவை எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா அவர்கள்.*

திரு. சி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி கலைக் கல்லூரியில் விண்ணப்பங்கள் வந்து கொண்டே இருக்கின்ற காரணத்தினால், அங்கு படிக்கின்ற மாணவ மாணவியர்களின் எண்ணிக்கையையாவது கூடுதலாக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணையின்படி, எட்டிக்கோட்டைமேடு பகுதியில் B.Ed. கல்லூரி கட்டடப் பணி முடிந்துள்ளது. இந்த ஆண்டு மாணவர்கள் படிக்க ஏதுவாக அந்தக் கல்லூரி துவங்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கேற்ப, ஏற்கெனவே 2011–ல் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னால், அந்த மாவட்டத்தில் கூடுதலாக பாடப் பிரிவுகள் தேவைப்படுகின்ற அளவிற்கு வழங்கப்பட்டிருக்கின்றன.*

தமிழகம் முழுவதும் ஒட்டுமொத்தமாக, 2011 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஒதுக்கப்பட்ட பாடப் பிரிவுகளின் எண்ணிக்கை 1,585 ஆகும். அதிலே சேலம் மாவட்டத்தில் இருக்கக்கூடிய கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மட்டும் இளநிலை பாடப் பிரிவுகள் 10, முதுநிலை பாடப் பிரிவுகள் 21, M.Phil. *பாடப் பிரிவுகள் 13,* Ph.D. *பாடப் பிரிவுகள் 5 என ஒட்டுமொத்தமாக 49 புதிய பாடப் பிரிவுகளை வழங்கி, அந்த மாணவர்களுடைய சேர்க்கைக்கு எந்தவித குந்தகமும் ஏற்படாத அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசானது செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. அந்த வகையில், மாணவர்களின் எண்ணிக்கை கூடுகின்றபோது,*

கண்டிப்பாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக இருக்கக்கூடிய அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலே, அந்த மாணவர்களின் சேர்க்கைக்கு எந்தவிதமான பாதிப்புகளும் இல்லாத வகையில், தேவை ஏற்படின், பரிசீலனை செய்து, புதிதாகக் கல்லூரி ஒன்றைத் தொடங்க ஆய்வு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், இன்றைக்கு கல்வியியல் கல்லூரி, அதாவது, B.Ed. *கல்லூரி தொடங்கப்படுமா என்றும் கேட்டிருக்கிறார். இந்த ஆண்டு* B.Ed. *தொடங்குவதற்குண்டான வாய்ப்புகள் இல்லை; நிறுத்தப்பட்டிருக்கிறது.* Integrated course *என்று சொல்லக்கூடிய* B.Sc., B.Ed., *மற்றும்* B.A., B.Ed., *ஆகிய பாடப் பிரிவுகளை அங்கே தொடங்குவதற்கான பணிகளில் அரசானது முனைப்போடு செயலாற்றிக் கொண்டிருக்கிறது. ஆகவே,* NCTE*–யிடமிருந்து அனுமதி கிடைத்தவுடன், இந்தக் கல்வியாண்டிலேயே அந்தக் கல்லூரியைத் தொடங்குவதற்கான பணிகளை அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமைகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 75, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

75—

கால்நடை மருத்துவமனை

***48758—திரு. சிவ.வீ. மெய்யநாதன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, கொத்தக்கோட்டை ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*